# <u>கரூர் மாவட்டம்</u>

# <u>கிருஷ்ணராயபுரம் இரண்டாம் நிலை பேரூராட்சி</u>

## <u>சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2010 –2011</u>

# <u>நாடு தழுவிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு</u>

ந.க. எண்: **160/2010** நாள் : **14.07.2010**

கிருஷ்ணராயபுரம் இரண்டாம் நிலை பேரூராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் **2010 –2011** ஆம் ஆண்டிற்கு கீழ்குறிப்பிட்ட பணிகளை செய்து முடிப்பதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள், தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து 13.08.2010 **ஆம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 3.00 மணி வரை** பேரூராட்சி செயல்அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்றுக் கொள்ளப்படும். **அன்று பிற்பகல் 3.30 மணி அளவில்** வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும்.

மேற்கண்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி நமூனாக்கள் கிருஷ்ணராயபுரம் இரண்டாம் நிலை பேரூராட்சி அலுவலகத்தில் அதற்குண்டான தொகையை அட்டவணையில் கண்டுள்ளவாறு வங்கி வரைவோலையாக மட்டுமே செலுத்தி (திருப்பிதரத்தக்கதல்ல) 12.08.2010 **ஆம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்குள்** பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிக்கான டேவணித் தொகையை பேரூராட்சி அலுவலகத்தில் செயல் அலுவலர் கிருஷ்ணராயபுரம் இரண்டாம் நிலை பேரூராட்சி என்ற முகவரிக்கு கிருஷ்ணராயபுரம்/குளித்தலை கிளைகளில் மாற்றத்தக்க வங்கி வரைவாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும்.

மேலும் இப்பணிகளுக்கான ஒப்பந்தப் படிவங்களை **ரூ.5.00 இலட்சத்திற்கு மேல் ரூ.**10,00 **இலட்சம் வரை மதிப்பீட்டில் உள்ள பணிகளை "http://tntownpanchayats.org" என்ற இணையதளத்தில் இருந்தும் ரூ.10.00 இலட்சத்திற்கு மேல் மதிப்பீட்டில் உள்ள பணிகளை "http://www.tenders.tn.gov.in"** என்ற இணையத்தில் இருந்தும் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பெற்றுக் கொள்ளலாம். மேலும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் போது ஒப்பந்தப்புள்ளி படிவங்களுக்கான தொகையை ரொக்கமாக செலுத்த வேண்டும்.

## ***ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்***

1. ஒவ்வொரு வேலைக்கும் நிர்ணயிக்கப்பட்ட வைப்புத்தொகை செலுத்திய இரசீது இணைக்கபடாத ஒப்பந்தப்புள்ளிகளும் குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு கொடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. செலுத்தப்படும் டேவணித் தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்படமாட்டாது. டேவணித்தொகை டிமாண்டு டிராப்ட் மூலமாக செலுத்தப்படவேண்டும்.

3. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையோ எவ்வித காரணம் கூறாமல் ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

4. ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வேலை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட மூன்று தினங்களுக்குள்அதற்குரிய படிவத்தில் **ரூ.20/-** மதிப்புள்ள முத்திரைத்தாளில் (ஸ்டாம்பு பேப்பரில்) உடன்படிக்கை ஒன்று எழுதித்தர வேண்டும்.

5. வேலை உத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ள காலஅளவிற்குள் வேலை முழுமையாக முடித்துக் கொடுக்க வேண்டும். இல்லையேல் வேலையை ரத்து செய்யவும் அபராதம் விதிக்கவும் செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் அனைத்து இழப்புக்கும் ஒப்பந்ததாரர்களே பொறுப்பாவர்கள்.

6. சாலை வேலைகளை பொறுத்த வரையில் கிராவல் மற்றும் ஜல்லி சேகரத்திற்கு மட்டும் தொகைபட்டுவாடா செய்யப்பட மாட்டாது. பரத்தல் வேலையை நல்ல முறையில் செய்து வேலையை முழு அளவில்முடித்த பின்னர் தான் முழுத்தொகையும் பட்டுவாடா செய்ய இயலும்.

7. கட்டுமான வேலைக்கென சேகரம் செய்யப்படும் பொருட்கள் பொறியாளரால் நிராகரிக்கப்பட்டால் ஏழுதினங்களுக்குள் அப்பொருட்களை அப்புறப்படுத்திக் கொள்வதுடன் பொறியாளரால் ஏற்றுக்கொள்ளப்படும் வகையில் தரம் வாய்ந்த மாற்றுப் பொருட்களை வேலை நடக்கும் இடத்தில் ஒப்பந்ததாரர் சேகரித்தல் வேண்டும். தவறினால் நிராகரிக்கப்பட்ட பொருட்கள் பேரூராட்சி பொருட்களாக கருதிஅப்புறப்படுத்தப்படும்.

8. மேற்படி திட்டத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளபடும் பொழுது ஒவ்வொரு நிலையிலும் பணியின் தரம் உறுதி செய்யப்பட வேண்டும்.

9. தொடர்புடைய வேலைகளுக்கான பட்டியலை தணிக்கை செய்யப்பட்டு தணிக்கையில் தடை ஏதும் இல்லை என முடிவு தெரிந்த பின்னர் தான் அவ்வேலைக்காக ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட்ட டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பி கொடுக்கப்படும்.

10. வேலைகள் சம்மந்தமாக அவ்வப்பொழுது அரசினால் வெளியிடப்படும் உத்திரவுகளுக்கு உட்பட்டு ஒப்பந்ததாரர்கள் வேலையை செய்ய வேண்டும்.

11.√ **வேலை உத்திரவு வழங்கும்பொழுது செய்யப்படும் வேலையின் மதிப்பீட்டிற்கு கட்டிட தொழிலாளர் நலநிதி 0.3 சதவீதம் வங்கி வரைவு மூலம் பெற்று சமர்பிக்க வேண்டும்.**

12. திட்டப்பணிகளுக்கு திட்ட மான்யம் பெறப்பட்டவுடன் தொகை வழங்கப்படும்.

13. இப்பணி குறித்த பொருள்கள் மாவட்ட ஆட்சித்தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட விலையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கொள்முதல் செய்ய வேண்டும்.

14. வேலைகள் சம்மந்தமாகவும் மற்றும் இதர விவரங்களை வேண்டுவோர் அலுவலக வேலை நாட்களில் அலுவலக வேலை நேரத்தில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

15.√ **ரூ. 5.00 லட்சம் மற்றும் அதற்கு மேல் மதிப்புள்ள பணிகளுக்கு மூன்றாம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்தகுதியுள்ள ஒப்பந்ததாரர்கள் மட்டுமே கலந்து கொள்ள இயலும்.**

16.√ **மேலும் ரூ. 5.00 லட்சத்திற்கு மேல் மதிப்புள்ள பணிகளுக்கு தகுதி வாய்ந்த தொழில் நுட்ப உதவியாளர் பணியில் அமர்த்தப்பட வேண்டும். ஒப்பந்ததாரர் அதற்கான சான்றிதழ் நகலை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.**

17. அனைத்துப் பணிகளுக்கும் இறுதிப் பட்டியலில் 5 சதவிகித தொகை பிடித்தம் செய்யப்படும். கட்டிட பணிகளுக்கு பணி முடிந்து 6 மாதங்கள் கழித்தும் சாலை பணிகளுக்கு பணி முடிந்து 12 மாதங்கள் கழித்தும் இத்தொகை திரும்ப வழங்கப்படும்.

18.√ **ஒப்பந்ததாரர் கடந்த 5 ஆண்டுகளில் ஏதேனும் மூன்று ஆண்டுகளில் பணியின் மதிப்பிற்கு மேல் 2 ½ மடங்குமதிப்பிற்கு வேலைகள் எடுத்துச் செய்திருக்க வேண்டும்.**

19.√ **கடந்த 5 ஆண்டுகளில் ஏதேனும் ஒரு ஆண்டில், ஒப்பந்தப்புள்ளி கோரும் மொத்த மதிப்பில் ½ மடங்கு மதிப்புள்ள பணியை ஒரே பட்டியலில் (Final Bill) செய்து முடித்திருக்க வேண்டும்.**

**20.** **இப்பணிக்கு இரு உறை ஒப்பந்தப்புள்ளி முறை (Two Cover System)** பின்பற்றப்படும். இதில் ஒரு உறையில் ஒப்பந்ததாரர் செய்துள்ள பணிகள் மற்றும் அவரது சொத்து மதிப்பு, தொழில்நுட்ப உதவியாளர், மற்றும் சொந்தமாக வைத்துள்ள உபகரணங்கள், வாகனங்கள் ஆகியவை குறித்த விவரங்களுடன் உறையின் மேல் **Technical Bid** என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

மற்றொரு உறையில் ஒப்பந்தப்புள்ளி படிவம் பூர்த்தி செய்யப்பட்டு, அந்த உறையின் மேல் **Price Bid** என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

**21.** செயல் அலுவலரால் முதலில் **Technical Bid** உறை மட்டுமே திறக்கப்படும். அதில் நிபந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் இருந்தால் மட்டுமே **மற்ற உறை** பிரிக்கப்படும்.

**22.** மற்ற விபரங்களை வேலை நாட்களில் அலுவலகத்தில் நேரில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

<u>முக்கிய குறிப்பு</u>**:-**

- **நிபந்தனைகள் 11, 15, 16, 18 மற்றும் 19-ஐ சிறப்பினமாக கருதி இந்நிபந்தனைகளை கண்டிப்பாக பின்பற்றி ஒப்பந்தப்புள்ளி கோரப்படவேண்டும்.**

## ***வேலைகள் விபரம்***

## சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2010 –2011

(ஒப்பந்தப்புள்ளி நமூனா மற்றும் டேவணித்தொகை **Executive Officer, Town Panchayat, Krishnarayapuram** என்ற பெயருக்கு கிருஷ்ணராயபுரம்/குளித்தலை கிளைகளில் மாற்றத்தக்க வங்கி வரைவாக எடுக்க வேண்டும்.)

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ) | ஒப்பந்தப் புள்ளி நமூனா விலை (ரூ) | டேவணித் தொகை 1% (ரூ) | வேலை முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| 1. | கிருஷ்ணராயபுரம் பேரூராட்சி குச்சிப்பட்டி முதல் தாராபுரத்தானூர் மெயின் ரோடு வரை தார் சாலை அமைத்தல் | 13,00,000 | 6000+240 | 13,000 | 90 நாட்கள் |

செயல் அலுவலர்,
கிருஷ்ணராயபுரம் பேரூராட்சி,
கரூர் மாவட்டம்.

<u>பெறுநர் :</u> கிருஷ்ணராயபுரம் இரண்டாம் நிலை பேரூராட்சியில் பதிவு செய்துள்ள அனைத்து ஒப்பந்ததாரர்கள்.

<u>நகல் :</u>

**01)** தலைவர், துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள், கிருஷ்ணராயபுரம் இரண்டாம் நிலை பேரூராட்சி.

**02)** பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை–108 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

**03)** மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஆட்சியரகம், கரூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

**04)** பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திண்டுக்கல் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

**05)** உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், திண்டுக்கல் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

**06)** இளநிலை பொறியாளர், புலியூர் குழுமம் பேரூராட்சி.

**07)** அலுவலக தகவல் பலகைக்கு

**08)** அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள், கரூர் மாவட்டம் தகவலுக்கும் இந்த விளம்பரத்தை தங்கள் அலுவலக விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரம் செய்யவும் அனுப்பி வைக்கப்படுகிறது.

**09)** மற்றும் சம்பந்தப்பட்ட கோப்புகளுக்கு.